236—

புதிய மாவட்டம்

***5926—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்படும் புதிய மாவட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை நிறைவு செய்யாததால், வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல படை திரண்டு மோதியபோதும், தனிப் படையாய், தானே தலைமை கொண்டு இந்திய அரசியல் வரலாற்றில் முதல் முறையாக, 39 தொகுதிகளில் போட்டியிட்டு, 37 தொகுதிகளில் இமாலய வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய துணைக் கண்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை மூன்றாவது பெரிய இயக்கமாக உருவாக்கி, அரசியல் சிம்மாசனத்திற்கு சிறப்புப் பெற்றுத் தந்த, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நலத் திட்டங்களை மக்கள் உடனுக்குடன் பெற்றுப் பயனடையவும், மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் மக்களை நேரடியாகச் சந்தித்து குறைகளைத் தீர்க்கவும், அதேபோல் மக்கள் தங்களது குறைகளை மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளிடம் தெரிவித்து உடனடித் தீர்வு பெற்றிடவும், நிருவாகக் காரணங்களுக்காகவும், மாவட்ட எல்லைகளை வரையறுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட எல்லை பிரிப்பிற்கான அரசாணை எண் 279–ல், வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. புதிய மாவட்டம் அமையத் தேவையான பரப்பளவு 2,500 சதுர கிலோ மீட்டர் முதல் 9,000 சதுர கிலோ மீட்டர் என்றும், மக்கள்தொகை 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றும், வருவாய்க் கிராமங்கள் 200 என்றும், வட்டங்கள் 5 என்றும், கோட்டங்கள் 2 என்றும் இருக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது வேலூர் மாவட்டம், தமிழகத்திலே மிகப்பெரிய மாவட்டமாக உள்ளது. வேலூர் மாவட்டம் 6,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் கொண்டதாகவும், மக்கள்தொகையில் 39,28,106 நபர்களைக் கொண்டதாகவும் உள்ளது. 13 சட்டமன்றத் தொகுதிகளும், 3 வருவாய்க் கோட்டங்களும், 11 வருவாய் வட்டங்களும், 20 ஊராட்சி ஒன்றியங்களும் மற்றும் 742 வருவாய்க் கிராமங்களையும் உள்ளடக்கி, வேலூர் மாவட்டம் தமிழகத்திலே மிகப்பெரிய மாவட்டமாக உள்ளது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. கா.கோ. ரமேஷ்: *நிருவாக ரீதியாகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நலத் திட்டங்களை மக்கள் உடனுக்குடன் பெற்றுப் பயன்பெறவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட எல்லையை வரையறை செய்யும்பொருட்டு, திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் ஆகிய 5 வருவாய் வட்டங்களைக் கொண்டு, மக்களுடைய நீண்டநாள்*

TRUTH ALONE TRIUMPHS

கனவாக உள்ள திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அமைத்துத் தர வேண்டி, ஏழரை கோடி மக்களின் ஜீவசுருதியாகவும், கருணைப் பெருங்கடலாகவும் உள்ள. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: எப்போதும் மக்கள் நலன் பெரிது என்ற தாரக மந்திரத்துடன், ஒரு நாளின், 24 மணி நேரத்தில், 20 மணி நேரத்திற்கும் மேலாக அல்லும் பகலும் உழைத்து, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அவற்றை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தி, 'மக்களுக்காகவே நான்' என வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வேண்டிக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன் எப்போதும் இல்லாத முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசு எடுத்து வருகிறது. மேலும், பொது மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள் தொகை மற்றும் நிலப் பரப்பின் அடிப்படையில், வட்டங்கள், கோட்டங்கள் மற்றும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்களைப் பிரிப்பது தொடர்பாக, மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல், அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, புதிய மாவட்டத்தை உருவாக்க, குறைந்த அளவு 2,500 சதுர கிலோ மீட்டர் முதல், அதிக அளவு 9 ஆயிரம் சதுர கிலோ மீட்டரும், மக்கள் தொகையைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு 10 இலட்சம் முதல், அதிக அளவு 30 இலட்சம் வரையிலும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு 200 கிராமங்கள்,

2014 ஜூலை 23]

வட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில், குறைந்த அளவு 5 வட்டங்கள், கோட்டங்களைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு இரண்டு கோட்டங்கள் இருத்தல் வேண்டும்.

மேலும், புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கு, நிலம், கட்டடங்கள், பணியாளர் நியமனங்கள், வாகனங்கள் என்ற வகையில், சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்படுகின்றது. தற்போதுள்ள வேலூர் மாவட்டம், பரப்பளவில் 5,920.18 சதுர கிலோ மீட்டரும், மக்கள் தொகையில் 39,28,106 நபர்களையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை பதினொன்றையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 842–ஐயும் கொண்டுள்ளது. உத்தேசிக்கப்படும் திருப்பத்தூர் மாவட்டம் பிரிக்கப்படுமாயின், அது பரப்பளவில் 2,683.78 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 16,57,235 நபர்களையும், வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை ஒன்றையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை ஐந்தையும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையில் 304–ஐயும் கொண்டதாக இருக்கும்.

எஞ்சிய வேலூர் மாவட்டம், பரப்பளவில் 3,236.40 சதுர கிலோ மீட்டரையும், மக்கள் தொகையில் 22,70,871 நபர்களையும், வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை இரண்டையும், வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை 6–ஐயும், வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை 538–ஐயும் கொண்டதாக இருக்கும். இந்நேர்வில் உத்தேசிக்கப்படும் திருப்பத்தூர் மாவட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலை நிறைவு செய்யாததால், வேலூர் மாவட்டத்தைச் சீரமைத்து, புதிதாக திருப்பத்தூர் மாவட்டம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, தமிழக வருவாய்த் துறை வரலாற்றில், முன் எப்போதும் இல்லாத வகையில், ஒவ்வொரு வருவாய்க் கிராமம் வாரியாக, தமிழகம் முழுவதுமுள்ள 16,710 வருவாய்க் கிராமங்களுக்கும், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைதோறும், வட்டாட்சியர் தலைமையில், வட்டாட்சியர் அலுவலகத்தையே ஒவ்வொரு வருவாய்க் கிராமங்களுக்கும் கொண்டு சென்றது 'அம்மா திட்டம்' என்பதனையும், (மேசையைத் தட்டும் ஒலி) 33,13,792 மக்களின் மனுக்களுக்கு, அவர்களின் இருப்பிடங்களிலேயே உடனடித் தீர்வு கண்டிருக்கின்ற, இந்தியாவிலேயே ஒரே அரசு, மாண்புமிகு அம்மா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அவர்களுடைய புனித அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கருணையின் பிறப்பிடம், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

237—

அரசு விழா

***47693—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியிலுள்ள தில்லையாடியில், தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*